9. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2021–2022, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021–2022 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2021–2022 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 7–1–2022 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2021–2022 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

நிறைவேற்றப்பெற்ற 2021–2022 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

	கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
1.	மாநிலச் சட்டமன்றம்	1	..	..
3.	நீதி நிருவாகம்	14	..	..
4.	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	6	..	..
5.	வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை	23	3	..
6.	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)	19	..	..
7.	மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)	23	3	..
9.	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	11	1	..
10.	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	7	..	..
11.	முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	3	..	..
12.	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	6	..	..

	கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
13.	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	1,020,25,42	1	..
14.	எரிசக்தித் துறை	1	1	..
15.	சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)	..	..	1,10,63
16.	நிதித் துறை	6	..	..
17.	கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	6	..	1
18.	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	12	..	..
19.	மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை	697,26,96	2	..
20.	உயர் கல்வித் துறை	74,28,10	3	..
21.	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை	..	11	..
22.	காவல் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	54	1	..

	கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
23.	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	2	..	..
24.	சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	4	1	..
25.	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	1	..	..
26.	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	138,15,08	1,000,00,01	1
27.	தொழில் துறை	4	1,00,00	191,84,91
28.	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	12	..	..
29.	சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	21	2	..
30.	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	1	34,34	..
31.	தகவல் தொழில்நுட்பவியல் துறை	8,00,05	..	..
32.	தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை	13	1	..

	கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
33.	சட்டத் துறை	5	..	..
34.	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	7	..	..
35.	மனித வள மேலாண்மைத் துறை	10	1	..
37.	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	1	..	..
38.	பொதுத் துறை	7,14,65	1	10,29,13
39.	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	..	11	..
40.	நீர்வளத் துறை	8	14	..
41.	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை	21	34,50,59	..
42.	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	13	3	..
43.	பள்ளிக் கல்வித் துறை	11	1	..
44.	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	8	..	..
45.	சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை	4,90,31	2	..
46.	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	10	..	..
47.	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	8	..	..
48.	போக்குவரத்துத் துறை	..	1	97,74,72
49.	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	5	..	..

	கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
50.	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	1	..	..
51.	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	421,28,52	..	..
52.	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	5	..	..
54.	வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)	3	..	..
	பெருமொத்தம்	**2,371,32,75**	**1,035,85,58**	**300,99,41**

8. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2021 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(ஏ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.